# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No. I, PUDUKKOTTAI.

**<u>CC. No. 57/2021 – அ.சா.1 (தமிழ்ச்செல்வி, க/பெ. இரவி) குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி ஆஜர்</u>.**

நாள்: 17.03.2025.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் சம்பவ சமயத்தில் எனது மகனுடன் இருந்தேன். நாங்கள் மன்னார்குடியில் இருந்து புதுக்கோட்டைக்கு பேருந்தில் வந்தோம். எனது மகனுக்கு மருத்துவம் பார்ப்பதற்காக வந்திருந்தோம். எனது மகனுக்கு மதுரையில் தான் சிகிச்சை பார்த்து வந்தோம். பேருந்து நிலையத்தில் இருந்து வெளியே வரும் இடத்திலேயே Auto stand உள்ளதா என்றால் உள்ளது.

2. நான் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சாலையின் இடது புறமும், எனது மகன் சாலையின் வலது புறமும் இருந்தோம் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து நடந்த விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டனரா என்றால் இல்லை. என்னிடம் PMCH ல் வைத்து நடந்த விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டார்கள்.

3. சம்பவம் நடந்த உடனேயே போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். இதற்கு பின்னிட்டு PMCH ல் போலீசார் என்னை விசாரித்து எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. எனது மகன் விபத்து நடந்த சமயத்தில் சாலையின் நடுப்பகுதியில் நின்றிருந்தார் என்றால் சாலையை குறுக்கே கடக்கும் போது விபத்து ஏற்பட்டது.

4. நான் நின்றிருந்த இடம் லாரியின் மறைவான பகுதி என்றால் சரிதான். எனது மகன் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவராக இருந்ததால் எனது கட்டுப்பாட்டை மீறி சாலையின் குறுக்கே திடீரேன கடந்து தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. இறந்து போன எனது மகனின் இறப்பிற்கு இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– சி.பாரதி)
நீதித்துறை நடுவர் எண் –1 ,
புதுக்கோட்டை.